13th February 1959]

SRI K. B. S. MANI : தற்கால உத்தரவுப்படி சிறிய மேக்கர் போன்ற சாமான்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று வைத்து இருந்தும் அவை களுக்கும் லைசென்ஸ் வழங்கப்படும் என்ற உத்தரவும் போடப்பட்டிருக் கிறது. அதனால் மேக்கர் போன்ற டெஸ்ட்பண்ணக்கூடிய சாமான் களும் கிடைப்பது இல்லை. அவைகளை இங்கேயே தயாரிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அவைகள் சுலபமாகக் கிடைப்பதற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தேவைப்படுகிற சாமான்களை உற்பத்திசெய்வதற்கு முதலாளிகள் அக்கறை கொள்ளுவார்கள். லாபம் அதிகமாக வரும் என்று வருவதினால் அவர்களே உற்பத்தி செய்ய முன் வருவார்கள். ஏதாவது சாமான்கள் வேண்டியதாக இருந்தால் அவைகளை உற்பத்தி செய்ய அவர்களே முன் வருவார்கள். தனியார் துறையில் சர்க்கார் என்ன உதவிசெய்ய வேண்டுமென்று கருதுகிறார் களோ அதைச் செய்யும்.

SRI M. P. SUBRAMANIAM : மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இப் பொழுது பரவலாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நேரத்தில் ஸ்டார்ட்டர்கள், சுவிச்சுகள் போன்ற சாமான்களை ஒன்றுக்கு ஒன்றரை பங்கு கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத் திற்குத் தெரியுமா ? இங்கே செய்யப்படும் சாமான்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால், மேலும் வெளிநாடுகளிலிருந்து போதிய அளவு இறக்குமதி செய்வது இல்லாத காரணத்தால் இந்த சாமான்கள் ப்ளாக் மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே இவைகளை போதுமான அளவுக்கு இங்கேயே உற்பத்தி செய்ய தனியார் துறையில் விடுவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையில் ஏதாவது திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் கருதினால் சர்க்கார் நிச்சய மாக அதைச் செய்யும்.

Planting trees on road sides

* 287 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent for planting trees on road sides by the Highways Department, Pudukkottai Division in the Tiruchirappalli district for the years 1957 and 1958?

THE HON. SRI P. KAKKAN : The expenditure on planting avenue trees on Government roads was Rs. 27,813 in 1957 and Rs. 21,306 in 1958 and that on District Board roads was Rs. 13,594 in 1957 and Rs. 11,410 in 1958.

Community Development Scheme

* 288 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச் சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1958-வது ஆண்டில் வடஆற்காடு ஜில்லாவில் எங்கெங்கே சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : During the year 1958 the following five blocks were launched in the North Arcot district :—

(1) Tirupattur Block,

(2) Wallajah Block,

(3) Sholinghur Block,

(4) Kaveripakkam Block, and

(5) Vaniyambadi Block.

SRI V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லா ஒரு பஞ்ச பிரதேசம், வரண்ட பிரதேசம். ஆகவே சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அதைக் கொண்டுவரவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியதற்கு அதைப்பற்றி எங்களுடைய ஜில்லா ப்ளானிங் கமிட்டியில் வைத்து அவர்களுடைய முடிவையும் எடுத்து அதைப்போல் செய்யலாம் என்று எழுதியவர் அங்கே முடிவு எடுத்து அதையும் இங்கே அனுப்பினார்கள். ஆனால் இங்கே அதற்கு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ப்ளானிங் கமிட்டியின் முடிவுதான் முடிவா அல்லது சர்க்காருடைய முடிவுதான் முடிவா என்பதைப்பற்றி தெளிவாக தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சில விஷயங்களில் அங்கே சொல்வதை ஏற்றுக்கொள்வதுண்டு. ஆனால் இது சம்பந்தமாக அங்கே விவகாரம் நடந்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் வட ஆற்காடு ஜில்லாவில் இது சம்பந்தமாக ப்ளானிங் கமிட்டியில் ஒரு முடிவுக்கும் வர முடியாதபடி சீட்டுப்போட்டு குலுக்கிப்பார்த்து அதன்படி முடிவு எடுத்து இருக்கிறார்கள். அம்மாதிரியான முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கேயும் அப்படி சீட்டுப்போட்டு குலுக்கி எடுக்க முடியாது.

SRI D. S. AUTHIMOOLAM : இது வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த கேள்வியாக இருந்தாலும் பொதுவாகக் கேட்க வேண்டுமென்று . . .

MR. SPEAKER : அப்படிக் கேட்கக் கூடாது.

SRI D. S. AUTHIMOOLAM : Suppose the Hon. Minister agrees to it, I can get a reply.

MR. SPEAKER : I must also admit the question. The Minister is not the final authority in the matter.

River pumping scheme in Tiruchendur

*289 *Q.*—SRI M. S. SELVARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுகாவில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் கீழ் தாம்பரபாணி நீர்ப்பாசனத்திற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் River pumping Scheme எந்த இடத்தில் அமைக்கப்படும்?

(ஆ) அதன் உத்தேச செலவு என்ன ?

(இ) அதனால் பாசனம் பெற உத்தேசிக்கப்படும் நிலங்களின் அளவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—

(*a*) At Mela Authoor village.

(*b*) Non-recurring : Rs. 19,100.
Recurring (per year) : Rs. 4,126.

(*c*) 120·00 acres.

SRI M. S. SELVARAJAN : புதிதாக சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்களுக்கு பெட்டர்மெண்ட் டாக்ஸ் விதிப்பது என்பது அரசாங்கத்தின் உத்தேசமா? அல்லது தண்ணீர் தீர்வை விதிக்க உத்தேசமா? விதிக்கப்படுமானால் தண்ணீர் தீர்வை நிலத் தீர்வையை விட அதிகமில்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.